**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.நடைமுறை.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~
Under Section 173 BNSS

DSP/V&AC/Dgl

C 8081641

1. District மாவட்டம் : திண்டுக்கல் PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 04/25 Date: நாள் 30.04.25

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 29.04.25 at 10.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.04.25 Time : நேரம் 07.45 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.04.25 Time : நேரம் 08.50 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 64 KM மேற்கு.
Beat Number : முறைக் காவல். எண் (b) Address : முகவரி உதவி மின்பொறியாளர் அலுவலகம் தெற்கு பிரிவு, பழனி, திண்டுக்கல் மாவட்டம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. மகேந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மகாலிங்கம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் வழக்கறிஞர் (g) Address : முகவரி 65 A மருதகாளியம்மன் கோவில் தெரு, பாலசமுத்திரம் போஸ்ட், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. சிவக்குமார், உதவி மின்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், தெற்கு பிரிவு, பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30/4/2025 30/04/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.04.25 at 10.30 hrs

Name: பெயர் ஜெ. ஜோதீஸ்வராணி
Rank: நிலை ……………………No. எண்……
காவல் ஆய்வாளர்,
உள.த.க. பிரிவு,
திண்டுக்கல்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:4/2025 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 30.04.2025-ம் தேதி காலை 07.45 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலசமுத்திரம் போஸ்ட், 65 A மருதகாளியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் திரு.மகாலிங்கம் மகன் M.மருதராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 30.04.2025-ம் தேதி காலை 08.50 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்.M.மருதராஜ், த/பெ.மகாலிங்கம், 65 A மருதகாளியம்மன் கோவில் தெரு, பாலசமுத்திரம் போஸ்ட், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம். பெறுநர்.உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல் அய்யா, நான் மேற்சொன்ன முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு பழனியில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். எனது உடன்பிறந்த இளைய சகோதரர் திரு.முருகானந்தம் பாலசமுத்திரம் பேரூராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து பேரூராட்சியில் வழங்கப்படும் பணிகளை எடுத்து செய்து வருகிறார். அவ்வாறு பணிகளை மேற்கொள்ளும் போது கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2024-2025-ன் கீழ் 14 வது வார்டு பாலாறு அணைப்பகுதியில் புதிதாக அங்கன்வாடி மையம் அமைக்கும்பணி செய்து வந்தார். நான் அவ்வப்போது அவருக்கு உதவி செய்து வருவேன். அவர் அங்கன்வாடி மையம் கட்டி முடித்த பிறகு மின்இணைப்பு பெறுவதற்காக என்னை மின்இணைப்பு பெறும் பணிகளை பார்த்து கொள்ளுமாறு கூறினார். அவர் சொன்னதன் பேரில் பழனி தெற்குபிரிவு உதவி மின்பொறியாளர் அலுவலகம் அருகே அமைந்துள்ள கம்ப்யூட்டர் சென்டரில் பழனி குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் என்ற பெயரில் விண்ணப்பம் தயார் செய்து 17.04.2025-ம் தேதி குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் முகப்பு கடிதம் பெற்று மீண்டும் கம்ப்யூட்டர் சென்டரில் கொடுத்து மின்இணைப்பு பெறுவதற்காக விண்ணப்பித்தேன். அதன்பின்பு 22.04.2025-ம் தேதி இணையதளம் மூலம் அளித்த விண்ணப்பத்தின் அசலில் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலரிடம் கையொப்பம் பெற்று EB அலுவலகம் சென்று AE திரு.சிவக்குமார் என்பவரை சந்தித்து கொடுத்தேன். அப்போது AE அவர்கள் என்னுடைய அலைபேசி எண் 99445 65980-ஐ கேட்டு அதை விண்ணப்பத்தின் மீது எழுதிக்கொண்டார். மேலும் உதவி மின்பொறியாளர் இடத்தை ஆய்வு செய்த பிறகு இந்த எண்ணுக்கு கூப்பிடுகிறேன் என்று சொன்னார். பின்பு 25.04.2025-ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் உதவி மின்பொறியாளர் அலுவலகம் சென்று AE திரு.சிவக்குமாரை சந்தித்தேன். அப்போது அவர் கடந்த 3 நாட்களாக வேலையாக இருந்ததாகவும் இன்று வந்து இடத்தை ஆய்வு செய்ய வரும்போது தொலைபேசியில் அழைக்கிறேன் என்றும் கூறினார். அன்றைய

தினம் அங்கன்வாடி மையத்தை பார்வையிட்ட பிறகு காலை சுமார் 12.00 மணிக்கு அவருடைய உதவியாளர் அலைபேசி எண்ணிலிருந்து என்னை அழைத்து இடத்தை ஆய்வு செய்து விட்டதாகவும் மின்இணைப்பு பெறுவதற்கு deposit கட்டி விட்டு வாருங்கள் என்று கூறினார். 28.04.2025-ம் தேதி திங்கட்கிழமை மதியம் 01.20 மணிக்கு என்னை அவர் போனில் அழைத்து பணம் கட்டிவிட்டு வரச்சொன்னேனே ஏன் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் பணம் கட்டிவிட்டு வருகிறேன் என்று சொன்னேன். பின்பு உடனடியாக கம்ப்யூட்டர் சென்டர் நபருக்கு ரூ.4,350/- G pay செய்து deposit தொகை ரூ.4,230/- கட்ட சொன்னேன். மேற்படி விபரத்தை நேற்று 29.04.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு பழனி தெற்கு பிரிவு உதவி மின்பொறியாளர் அலுவலகம் சென்று AE திரு.சிவக்குமார் அவர்களை சந்தித்து deposit தொகை கட்டிய விபரத்தை சொல்லி மின்இணைப்பு எப்போது கொடுப்பீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் மின்இணைப்பு கொடுப்பதற்கு மின்கம்பம் 100 அடிக்குள் இருந்தால் உடனடியாக கொடுக்கலாம் ஆனால் புதிதாக கட்டபபட்டுள்ள அங்கன்வாடி மையத்தில் இருந்து 120 அடியில் தான் மின்கம்பம் உள்ளது. ஆகவே அங்கன்வாடி மையம் அருகே ஒரு புதிய மின்கம்பம் நடவேண்டும் என்றும் அதற்கு ஆகும் செலவை நீங்கள் பார்த்து கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு மின்கம்பம் நடுவதற்கு எனக்கு செலவிற்காக பணம் ரூ.5,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் அதற்கு சார் அது அரசாங்க கட்டிடத்திற்கு கொடுக்க வேண்டிய மின்இணைப்பு அதற்கு ஆகும் செலவை தாங்கள் தான் பார்த்து கொள்ள வேண்டும் என்று கூறினேன். அதற்கு அவர் அரசாங்க கட்டிடமாக இருந்தாலும் எனக்கு செலவுக்கு கொடுத்தால் தான் மின்இணைப்பு வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்று கூறினார். அப்போது நான் சார் ஏதாவது குறைத்து கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.5,000/- கொடுங்கள், labourக்கு ஆகும் செலவை இதில் நான் பார்த்துகொள்கிறேன் என்று சொன்னார். நான் அவரிடம் பணம் எடுத்து வரவில்லை என்றும் மதியத்திற்குள் வந்து தருகிறேன் என்றும் சொல்லிவிட்டு வந்து விட்டேன். பின்பு அவர் மதியம் 01.46 மணிக்கு என்னை போனில் அழைத்தார். நான் அவரது அழைப்பை எடுக்க முடியவில்லை அவர் மீண்டும் மதியம் 3.12 மணிக்கு அழைத்து ஏன் வரவில்லை என்று கேட்டார். நான் ஒரு முக்கிய வேலையாக இருப்பதால் மாலை வந்து விடுகிறேன் என்று சொன்னேன். பின்பு மாலை 05.45 மணிக்கு என்னை அழைத்தார். நான் அவரது அழைப்பை எடுக்க முடியவில்லை. பின்பு நான் யோசனை செய்ததில் அரசாங்க கட்டிடத்திற்கு மின்இணைப்பு பெறுவதற்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.5,000/- லஞ்சமாக கேட்ட பழனி தெற்குபிரிவு உதவி மின்பொறியாளர் திரு.சிவக்குமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த புகாருடன் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்திற்கு மின்இணைப்பு பெறுவதற்காக குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் பெயரில் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் நகல், ரூ.4,230/- deposit தொகை செலுத்திய ரசீது நகல் பாலசமுத்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் எனது தம்பி பெயரில் வழங்கிய பணிஆணை நகல் மற்றும் அங்கன்வாடி மையக்கட்டிடத்தின் புகைப்பட நகல்

ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும் உதவி மின்பொறியாளர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/-ம் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, Sd/-xxxxx (M.Marutharaj, 30.04.2025)

Sir, Received the complaint on 30.04.2025 at 07.45 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.04/2025, u/s.7(a) of P.C Act 1988, as amended by the PC (Amendment) Act 2018, on 30.04.2025 at 08.50 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul 30.04.2025)

Original FIR along with typed complaint of Tr.M.Marutharaj, S/o.Tr.Mahalingam, 65 A Maruthakaliamman Kovil Street, Balasamudram Post, Palani Circle, Dindigul District and with the relevant documents are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

J Rupa 30/04/25

(J.Rupa Geetharani),
Inspector of Police,
V&AC,
Dindigul